செய்தி வெளியீடு எண் : 055 நாள் : 08.01.2024

## செய்தி வெளியீடு

**உலக முதலீட்டாளர்கள் மாநாடு வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்பு**
**174 MSME நிறுவனங்களிடமிருந்து 50.70 லட்சம் அமெரிக்க டாலருக்கு கொள்முதல்கள்**
**இதில் 19.55 லட்சம் அமெரிக்க டாலர்கள்**
**73 புதிய முதல் முறை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து கொள்முதல்**
**மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**
**திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தகவல்**

------

பன்னாட்டு வாங்குவோர் விற்போர் சந்திப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :

ஆஸ்திரேலியா, ஜப்பான், இத்தாலி, சிங்கப்பூர், ஸ்பெயின், கென்யா மற்றும் உலகின் மற்ற பிற நாடுகளிலிருந்து வருகை புரிந்துள்ள கொள்முதலாளர்களை தமிழ்நாட்டின் சார்பில் வருக, வருக என வரவேற்கிறேன். தமிழ்நாடு இந்திய அளவில் 2–வது மிகப் பெரிய பொருளாதார மாநிலமாகவும், தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் 3–வதாகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் MSME தொழில் நிறுவனங்களுக்கென முதன் முதலில் ஒரு தனிக் கொள்கையை 2008–ஆம் ஆண்டு வெளியிட்டு பல்வேறு மானியங்களை அறிவித்து செயல்படுத்தினார்.இந்த திட்டத்தின் கீழ் கழக அரசு பொறுப்பேற்ற 21/2 ஆண்டுகளில், 12 ஆயிரத்து 182 MSME நிறுவனங்களுக்குரூ. 824 கோடியே 40 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை பின்பற்றி நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூதாயத்தின் அனைத்து பிரிவு மக்களையும் தொழில் முனைவோர்களாக உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் 5 வகையான சுயதொழில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். ஆட்சி பொறுப்பேற்று, இதுவரை ரூ. 1,099 கோடியே 86 லட்சம் மானியத்துடன்ரூ. 3 ஆயிரத்து 890 கோடியே 59 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 30 ஆயிரத்து 981 படித்த இளைஞர்களை புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையில், உலகின் தலைசிறந்த இடமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் Start Up –தமிழ்நாடு என்ற இயக்கத்திற்கு புத்துயிர் அளித்து வருகிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களின்முன் மாதிரியான திட்டங்களால், Start–Up தர வரிசையில் இந்திய அளவில் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, 3–ஆம் நிலைக்கு முன்னேறி "லீடர்" தகுதியை பெற்றுள்ளது. Start–Up த்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டத்தின் கீழ் கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 21 SC/ST தொழில்முனைவோர்க்கு ரூ. 28 கோடியே 10 லட்சம் நிதி உதவியுடன், 153 – ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ. 42 கோடியே 5 லட்சம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் – இளைஞர்கள் படிக்கும் காலத்திலேயே தொழில் முனைவோர்களாக உருவாக பள்ளி – கல்லூரிகளில் தொழில்முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம், தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆட்சி பொறுப்பேற்று, இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த 2 ஆண்டுகளில், 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ.7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளது. MSME தொழில் நிறுவனங்களுக்காக

1970–ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு சிட்கோ நிறுவனம் இன்று தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் 8 ஆயிரத்து 506.71 ஏக்கர் பரப்பளவில் 15,127 தொழில் மனைகளுடன் 130 தொழிற்பேட்டைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ரூ.324 கோடியே 66 லட்சம் மதிப்பீட்டில், 519 ஏக்கர் பரப்பளவில்8 தொழிற்பேட்டைகள் புதிதாக துவக்கப்பட்டுள்ளது. 325.64 ஏக்கர் பரப்பளவில் 8 புதிய தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

குறுந்தொழில் நிறுவனங்களின் மூலதன செலவை குறைக்கவும், உடனடியாக தொழில் தொடங்கவும், கிண்டி, அம்பத்தூர், சேலம் ஆகிய இடங்களில், ரூ.175 கோடியே 18 லட்சம் மதிப்பீட்டில் 264 தொழில் கூடங்கள் கொண்ட புதிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளன. MSME தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்குவதற்கு தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள் சென்னை – அம்பத்தூர் தொழிற்பேட்டை கோயம்புத்தூர்–குறிச்சி தொழிற்பேட்டைகளில் ரூ. 51 கோடியே 47 லட்சம் மதிப்பில் 1,300–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கும் வகையில் புதிய விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் MSME நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் இந்தியாவிலேயே முதன் முறையாக சொத்து பிணையில்லா கடன் பெற தமிழ்நாடு கடன் உத்தரவாத திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை, 30 ஆயிரத்து 158 தொழில் முனைவோர்களுக்கு ரூ.4 ஆயிரத்து 400 கோடி வங்கி கடனுக்கு ரூ.410 கோடியே 78 லட்சம் கடன் உத்தரவாதத்தை அரசு அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

MSME நிறுவனங்கள் தங்கள் விலை பட்டியல்களை வங்கிகளில் வைத்து விரைவாக கடன் பெற தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் – T N –TReDS செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், MSME நிறுவனங்களின் 8,371 விலைப் பட்டியல்களுக்கு, ரூ. ஆயிரத்து 522 கோடியே 91 லட்சம் வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 2 ஆண்டு காலத்தில், ரூ.147 கோடி அரசு மானியத்துடன் 37 குறுந்தொழில் குழுமங்களுக்கு Micro Cluster ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டின் MSME தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை உலக தரத்தில் உயர்த்திடும் வகையில் திண்டிவனத்தில் மருத்தியியல் குழுமம் திருமுடிவாக்கத்தில் துல்லிய உற்பத்தி குழுமம் என இரண்டு பெருங் குழுமங்களுக்கான Mega Cluster பணிகள் ரூ. 202 கோடியே 62 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் தென்னை நார் தொழிலை மேம்படுத்திடும் வகையில், கோயம்புத்தூரில் ரூ.5 கோடி மூலதனத்துடன் "தமிழ்நாடு தென்னை கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனத்தை" (TANCOIR) இந்த அரசு அமைத்துள்ளது. தென்னை நார் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியையும், கிராம பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்திட தென்னை நார் கொள்கை – 2024 மாண்புமிகு முதல்வர் அவர்களால் இரு தினங்களுக்கு முன் வெளியிடப்பட்டு உள்ளது.

பெரும் தொழில் சாலைகளுக்கு உதவிடும் வகையில் சென்னையில் இருந்து பெங்களூரு வரை தொழில் பெரு வழித்தடமாக Industrial Corridor அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் சமச்சீர் தொழில் வளர்ச்சி என்ற இலக்கினை அடைய, தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாய பெருமக்களுக்கு உதவிடும் வகையில், நாகப்பட்டினம்,

மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய வேளாண் பெரு வழித்தடம் Agro Industrial Corridor அறிவிக்கப்பட்டது. இத்திட்டமானது, 5 ஆண்டுகளில் செயல்படுத்தும் வகையில்,ரூ. ஆயிரத்து 170 கோடி மதிப்பில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் ஏற்றுமதியாளர்கள் உலகளவில் போட்டியிட ஏதுவாக, அனைத்து மாவட்டங்களிலும் ஏற்றுமதி ஊக்குவிப்பு மையங்கள், மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கு ஏற்றுமதி பயிற்சி, ரூ.100 கோடி மதிப்பில் தமிழ்நாட்டின் 10 இடங்களில் ஏற்றுமதி மண்டலங்கள் என ஏற்றுமதியை ஊக்குவித்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இதற்கு சாட்சியாக, தமிழ்நாடு 2022–23ஆம் ஆண்டில், இந்தியாவின் ஏற்றுமதியில் **9** சதவீத பங்களிப்பை அளித்து, 40.68 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. தேசிய ஏற்றுமதி வளர்ச்சியில் 14 சதவீதத்துடன் ஒப்பிடும்போது தமிழகத்தில் ஆண்டுக்கு **16%** ஏற்றுமதி அதிகரித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை உலகளாவிய ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் மையமாக மாற்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்ட ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை வெறும் இரண்டரை ஆண்டுகளில் மூன்றரை மடங்கு அதிகரித்து **7,585** ஸ்டார்ட்அப்களாக அதிகரித்துள்ளது

உலக முதலீட்டாளர் மாநாட்டில் நடத்தப்படும் இந்த வாங்குபவர் – விற்பனையாளர் சந்திப்பின் போது, **174** MSME நிறுவனங்களிடமிருந்து **50.70** லட்சம் அமெரிக்க டாலருக்கு கொள்முதல்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் **19.55** லட்சம் அமெரிக்க டாலர்கள் **73** புதிய முதல்முறை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை உற்பத்தியாளர்கள், கொள்முதலாளர்கள், ஏற்றமதியாளர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி நமது மாண்புமிகு முதல்வரின் இலக்கான 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடைய நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்" என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின்தென் மண்டல தலைவர் திரு. இஸ்ரார் அகமது, தொழில் துறையின் அரசுச் செயலர் திரு.வி. அருண்ராய், இ.ஆ.ப, MSME துறையின் அரசுச் செயலர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப, சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. மதுமதி, இ.ஆ.ப., தொழில் வணிக ஆணையர் திரு.நிர்மல் ராஜ், இ.ஆ.ப., கூடுதல் தொழில் வணிக ஆணையர் திருமதி. கிரேஸ் பச்சோவ், இ.ஆ.ப., இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பின் தென் மண்டல தலைவர் திரு. ஹபீப் உசேன், தொழில் அதிபர்கள், MSME தொழில் முனைவோர்கள், துறை சார்ந்த அலுவலர்கள், கலந்து கொண்டனர்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in